Before the Mountains Were Born

Album 23 Song 4

Song 4 பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும்

Psalm 90 (Moses' prayer) – Contrast between God's eternity and man's short, fragile life. Teaches us to number our days and gain a heart of wisdom.

பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும்
பர்வதங்களெல்லாம் தோன்றும் முன்னும்
என்றென்றைக்கும் நீரே தேவனாயிருக்கிறீர்
இருக்கின்றவராகவே என்றும் இருக்கின்றீர்

நேற்று கழிந்த நாள் போலவும்
இராச்சாமம் போலவும்
உமது பார்வைக்கு ஆயிரம் வருஷமானது
உமது பார்வைக்கு ஆயிரம் வருஷமானது

காலையிலே முளைக்கிற புல்லைப்போலவும்
நித்திரைக்கு ஒத்து இருப்பது போலவும்
மனுஷரை வெள்ளம் போல் வாரிக்கொண்டு போகிறீர்
மனுஷரை வெள்ளம் போல் வாரிக்கொண்டு போகிறீர்

பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும்
பர்வதங்களெல்லாம் தோன்றும் முன்னும்
என்றென்றைக்கும் நீரே தேவனாயிருக்குறீர்
இருக்கின்றவராகவே என்றும் இருக்கின்றீர்

காலையிலே முளைத்துப் பூப்பது போலவும்
மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போலவும்

உமது உக்கிரத்தால் கலங்கிப் போகிறோம்
உமது உக்கிரத்தால் கலங்கிப் போகிறோம்

எங்கள் வருஷங்களை கதையைப்போல் கழித்து போட்டோம்
எங்கள் நாட்களெல்லாம். உம் கோபத்தால் போய்விட்டது
நாங்கள் துன்பத்தை கண்ட வருஷங்களுக்கு
சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்

பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும்
பர்வதங்களெல்லாம் தோன்றும் முன்னும்
என்றென்றைக்கும் நீரே தேவனாயிருக்குறீர்
இருக்கின்றவராகவே என்றும் இருக்கின்றீர்

மனிதனின் ஆயுசுநாட்கள் எழுபது வருஷமே
பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமே
ஆயுசின் மேன்மையோ வருத்தமும் சஞ்சலமே
சீக்கிரமாய் எங்களைவிட்டு அது கடந்துபோகிறது

எங்களுக்கு ஞானம் நிறைந்த இருதயத்தை தாரும்
எங்கள் நாட்களை எண்ணும் அறிவை போதித்தருளும்
கர்த்தரே எங்களுக்காக திரும்பிவாரும்
உமது அடியாருக்கு பரிதபியும்

எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி
காலையிலே எங்களை உம் கிருபையால் திருப்தியாக்கும்

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும்
உமது மகிமை பிள்ளைகளுக்கும் விளங்கட்டும்

பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும்
பர்வதங்களெல்லாம் தோன்றும் முன்னும்
என்றென்றைக்கும் நீரே தேவனாயிருக்குறீர்
இருக்கின்றவராகவே என்றும் இருக்கின்றீர்

KJC-DNN